**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1** ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கணேசன் மூர்த்தி | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |
| கிராமம் | : | அரியப்பம்பாளையம் | வயது | : | |

**வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் அரியப்பம்பாளையம் கிராம நிர்வாக அலுவலராக உள்ளேன். நான் நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். அழைப்பாணையில் உள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். பட்டா எண்.326, புல எண்.255/7 ஜெகதீஷ்சன் பட்டா உள்ளது. அதன் பழைய சர்வே எண்.13/4, பட்டா படி ஜெகதீஷ்சன் 0.01.67 ஏர்ஸ் பூமி உள்ளது. புல எண்.255/7 க்கு வடபுறம் 10.8 மீட்டரும், கிழபுறம் 16 மீட்டரும், தென்புறம் 10 மீட்டரும், மேபுறம் 16.2 மீட்டர் புலவரைபடத்தின் படி தடத்தில் உள்ளது. மேற்படி அளவு குடியிருப்பு வீடு மற்றும் காலி மனை சேர்ந்தது. புல எண்.255/8 சொத்தானது கிராம ஆவணங்களின் படி ஓட்டு வீடு நிலுவை என பதிவாகி உள்ளது. புல எண்.255/8 ல் நான் கணக்கெடுக்க சென்ற பொழுது சரவணன் குடியிருந்தார். புல எண்.255/8 க்கு பட்டா வழங்கப்படவில்லை. 255/8 க்கு புல வரைபடத்தின்படி வடபுறம் 10.06 மீட்டரும், கிழபுறம் 15.6 மீட்டரும், தென்புறம் 10.6 மீட்டரும், மேபுறம் 16.0 மீட்டரும் அளவுகள் உள்ளது. புலஎண்.255/8 ல் கட்டிட பரப்பளவு போக காலி இடம் உள்ளதா என அளந்து பார்த்தால் தெரியயும், புல எண்.255/7 க்கும் புல எண்.255/8 க்கு எவ்வளவு பரப்பளவு வித்தியாசம் வரும் என்றால் அளந்து பார்த்தால் தான் தெரியும், புல எண்.255/7 ல் ஜெகதீஷ்சன் குடியிருந்து வருகிறார். கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் ஆவணமும், நிள அளவையர் வழங்கும் ஆவணமும் ஒரே மாதிரி ஆவணங்கள் என்றால் சரிதான். பட்டா என்பது சர்வேயர் அளவையின் படி அளந்து வழங்கப்படும்.

**1ம் பிரதிவாதி தரப்பில் ஆஜர் இல்லை. பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.25 04:33:28 +0530

District Munsif